# VELLORE DSIT

## முதல் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2022

## விடைக் குறிப்புகள்

வகுப்பு – 12 மதிப்பெண்: 90

பாடம் : பொதுத்தமிழ் நேரம்: 3 மணி

### பகுதி I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

1.இ) சிற்பி பாலசுப்பிரமணியம்

2.இ) 1-(ii), 2-(iv), 3-(i),4-(iii)

3.அ) குறுந்தொகை

4.இ) பண்புத்தொகை

5. ஆ) தண்டியலங்காரம்

6. இ) 4

7. இ) பிறகொருநாள் கோடை

8. ஈ) புனைவு

9. ஆ) இராமாவதாரம்

10.ஈ) நேரிசை வெண்பா

11.அ) ஒளிர்கின்ற கதிரவன்

12.ஈ) நன்னூல்

13.அ) பொருட்குறிப்பு

14. ஆ) உயர்திணை, அஃறிணை

### பகுதிII. (பிரிவு – 1 )

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×2=6

15.மூன்று பிரிவுகளை உடையது. 1
பொதுவியல், பொருளணியியல் ,சொல்லணியியல் 1

16.என் பொய்யான உலகப்பற்று அழிந்தது. 1
அளவற்ற காலம் செய்த தவம் பலித்தது .என் பிறவி ஒழிந்தது. 1

17.ஒருவருடைய செல்வம் குறையாமல் இருக்க வழி பிறருடைய கைப்பொருளை விரும்பாது இருத்தல் ஆகும். 2

18. * கதிரவன் மாலை நேரத்தில் மறைகையில் வானில் தோன்றும் சிவந்த பூக்களைப் போல சிவந்திருக்கும் உழைப்பாளர் கைகளையும், 1

*உடல்நோக உழைக்கும் அவரின் தோள்மீது முத்து முத்தாய் வெள்ளம் போல் தோன்றும் வியர்வையையும், வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார் சிற்பி. 1

### பிரிவு -2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×2=4

19.* விடியலின் புறக்களின் மீது பனிநீர் முத்தென வீற்றிருக்கும் –(மாணவர்கள் சொந்த நடையில் தொடர் எழுதி இருந்தால் முழு மதிப்பெண் வழங்குக.) 2

20.* ‘நடைபெற்றியலும் ’, ‘நடைநவின்றொழுகும்’, என்னும் சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது. 1

* ‘ஆசிரிய நடைத் தேவஞ்சி; ஏனை

வெண்பா நடைத்தேகலி 'என்றும் தொல்காப்பியம் சொல்கிறது. 1

21. * புக்கில்: தற்காலிகத் தங்குமிடம் 1

* தன்மனை : திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழும் இடம். 1

## பிரிவு 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7×2= 14.

22. ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி கூறுக .

அ) ஆங்கவற்றுள்– ஆங்கு+ அவற்றுள் 1

விதி: உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் 1

விதி: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஆ) வெங்கதிர் – வெம்மை+கதிர் 1

விதி: ஈறுபோதல் 1

விதி: முன்னின்றமெய்திரிதல்

23. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக

அ) அவருக்கு நன்மை தீமை நன்றாகத் தெரியும். 1

ஆ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது. 1

24. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

* விலை -மதிப்பு; விளை-விளைச்சல் ; விழை-விருப்பம் 1

*நிலத்தில் விளைந்த நெல்லை, விவசாயி நல்ல விலைக்கு விற்க விழைந்தார். 1

(மாணவர்கள் சொந்தநடையில் பொருத்தமான தொடர் எழுதி இருந்தால் முழு மதிப்பெண் வழங்குக.)

25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

அ) *கால்நடை :கால்நடைகள் மேய்ச்சலுக்குச் சென்றன.

* கால்நடை : பக்தர்கள் கால்நடையாய் கோவிலுக்குச் சென்றனர் . 1

ஆ) *பிண்ணாக்கு : மாட்டுக்குப் பிண்ணாக்குப் பிடிக்கும்

* பிள் நாக்கு : பிளந்த நாக்கினை உடையது பாம்பு . 1

(மாணவர்கள் சொந்த நடையில் தொடர் எழுதி இருந்தால் முழு மதிப்பெண் வழங்குக.)

*26.* வல்லின மெய்கள் இட்டும் நீக்கியும் எழுதுக.

ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல் என்னும் குணம் , உண்மையானவற்றைத் தெரிந்து கொண்டு அறியாமையினை அகற்றிப் பல நல்லனவற்றைக் கற்றுக் கொடுக்கும். *2*

*27.* பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.

அ) வெளியேறுதல் *1*

ஆ) நூல்நிரல் *1*

*28.* ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.

* அ) வந்து : வா(வ)+த்(ந்)+ த்+ அ *1*

வா-பகுதி, வ-என குறுகியது விகாரம் *1*

த்-சந்தி, த்-ந்ஆனதுவிகாரம்

த்–இறந்தகால இடைநிலை

உ-வினையெச்ச விகுதி

*ஆ) உயர்ந்தோர் : உயர்+ த்(ந்)+த்+ஓர் *1*

உயர்-பகுதி *1*

த்-சந்தி, த்-ந்ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி. (ஆ – ஓ ஆகத் திரியும்)

*29.* இலக்கணக் குறிப்பு தருக.

அ) வினையாலணையும் பெயர் . *1*

ஆ) உருவகம் *1*

*30.* தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ) பனை ஓலையால் கூரை வேய்ந்திருந்தனர் *1*

ஆ) வாழைத் தோட்டத்தில் குயில்கள் கூவிக் கொண்டும், காகங்கள் கரைந்து கொண்டும் இருந்தன. *1*

## பகுதி III. (பிரிவு1 )

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. *2×4 =8*

*31.* சங்கத்தமிழ்-தொல்காப்பியத்தமிழ் –காப்பியத்தமிழ்-பக்தித்தமிழ் – புரட்சித்தமிழ் – தன்னேரிலாத தமிழ் -முத்தமிழ்-செந்தமிழ்-உயர்தனிச் செம்மொழி -உலகம் போற்றும் உன்னதமொழி– பழமைவளம் – புதுமைநலம்– போன்ற பொருண்மையில் தமிழ்மொழியைப் சிறப்பித்து உரை எழுதியிருந்தால் மதிப்பெண் வழங்கலாம். *4*

*32.* * செய்யாமல் செய்த உதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் ஈடாகாது. *1*

* உரியகாலத்தில் செய்த உதவி சிறியதாயினும் உலகைவிட மிகப்பெரியது. *1*

*.பயனை எதிர்பாராமல் செய்த உதவியின் நன்மையை ஆராய்ந்தால் கடலைவிட பெரியது 1

* திணையளவு உதவி செய்தாலும், பயன் தெரிந்தவர் அதனைப் பனையளவாகக் கொண்டு மதிப்பர். 1

33. * சீதையைச் சிறையெடுத்த இராவணனுடன் சண்டையிட்டுக் காயப்பட்ட கழுகுவேந்தன் சடாயு, இராமனிடம் நடந்ததைக் கூறி இறந்து விடுகிறான். 1

* சடாயுவைத் தந்தையாகக் கருதி, மகன் நிலையில் இராமன் இறுதிச் சடங்குகளைச் செய்கிறான் 1

* கண்டவர் வியக்கும் வகையில் அகில் கட்டைகளையும், சந்தனக் கட்டைகளையும் கொண்டு வைத்தான்.

*தேவையான அளவு தருப்பைப் புற்களை அடுக்கிப் பூக்களைத் தூவினான் 1

* மணலினால் மேடையைத் திருத்தமாக அமைத்து, நன்னீரைத் தெளித்தான்.

* தந்தையாகிய சடாயுவைப் பெரிய கைகளில் தூக்கிக்கொண்டு வந்து மேடைமேல் வைத்தான் . 1

34.*மழைக்காலத்தில் கதிரவன் ஒளிபட்டு நகரம் பட்டைத் தீட்டிய வெள்ளை வைரமாக மின்னுகிறது. 1

*நீர் நிலைகளிலுள்ள நீரைக் கதிரவன் உதடுகள் குவித்து உறிஞ்சுகிறது

* மரங்கள் தலையசைத்து மழைத் துளிகளை உதறின. வெயில் கண்ட பறவைகள் உற்சாகத்தோடு சங்கீதம் இசைத்தன. 1

*கைகளில் ஏந்திய மழைத்துளிகள் நரம்புகளில் வீணைமீட்டுகிறது. 1

* போன மழை திரும்பவும் வருமென்று மேகங்களை வெறித்துப் பார்க்கையில், பிறகொரு நாள் கோடை வந்துவிட்டது. 1

பிரிவு 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2×4=8

35. * சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள பண்புதொகை மொழி– தொல்காப்பியம் எச்சவியல். 1

* 'நீர் படுகின்ற அல்லது நீர்ப்பட்ட –பசுமையான கலம்' என்பது, எதுவும் தொகாமல் வருகிற தொடர்மொழி. 1

* 'நீர் படு பசுங்கலம்' என்று ஆகும் போது தொகைமொழி. 1

* தொகைமொழி என்பது செறிவாக்கப்பட்ட வடிவமைப்பு. வாக்கிய அமைப்பில், ஒரு சொல் போலவே நடைபெறுவது . 1

36. *ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்வது ஒலிப்பின்னல் ஆகும். 1

* வன்மையான உணர்ச்சியைக் காட்ட க,த,ட,ற முதலிய வல்லின மெய்கள் அதிகமாக வரும்

"கடந்தடு தானை மூவரும் கூடி

உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே" -புறம். 1

*சிறுசிறு வாக்கியங்கள், பேசுவோரின் அறுதியிட்டுப் பேசும் தன்மையைக் காட்டும். 1

* உயிர்ஒலிகள்- குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகை சில ஒலிகளும் சிலசொற்களும் திரும்பி வரும் தன்மை பெற்றுச் சொல் விளையாட்டுகளைத் தோற்றுவிக்கும். 1

" படா அம்ஈத்தகெடாஅநல்லிசை " -புறம்.

" புணரின் புணராது பொருளே; பொருள்வயின்

பிரியின் புணராது புணர்வே" - நற்றிணை.

37. சிலம்புகழி நோன்பு :

* ஆண்மையச் சமூகத்தில் பெண் திருமணத்திற்குப் பின் தன் கணவனுடைய தந்தையகத்தில் வாழவேண்டும். 1

* மணமான பின் தலைவனின் இல்லத்திற்குத் தலைவியை அழைத்து வந்தபோது, அவனுடைய தாய் தலைவிக்குச் சிலம்பு கழிநோன்பு செய்திருக்கிறாள். 1

* நும்மனைச் சிலம்புகழீ இஅயரினும்

எம்மனை வதுவை நல்மணம் கழிக- ஐங்குறு 1

*இதன்வழி மணமகளின் வாழ்விடம் கணவன் அகம் என்பதை உறுதிப்படுத்தலாம். 1

38. தமிழர் பரம்பரை 2

| | |
|---|---|
| பரன் | பரை |
| சேயோன் | சேயோள் |
| ஓட்டன் | ஓட்டி |
| பூட்டன் | பூட்டி |
| பாட்டன் | பாட்டி |
| தந்தை | தாய் |

நாம் 2

| | |
|---|---|
| மகன் | மகள் |
| பெயரன் | பெயர்த்தி |
| கொள்ளுப் பெயரன் | கொள்ளுப்பெயர்த்தி |
| எள்ளுப்பெயரன் | எள்ளுப்பெயர்த்தி |

## பிரிவு 3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக . 3×4= 12

39.பொருள் வேற்றுமை அணி

அணி விளக்கம் : இருவேறு பொருள்களுக்கு இடையே ஒற்றுமையை முதலில் கூறிபின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி ஆகும். 1

சான்று : .

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி

ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்– ஆங்கவற்றுள்

மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது

தன்னேர் இலாத தமிழ். 1

பொருத்தம்: மக்களால் போற்றப்படுவது, மலையில் தோன்றுவது ,இருளை நீக்குவது போன்ற தன்மையில் தமிழுக்கும், கதிரவனுக்கும் இடையேயுள்ள பயன்சார்ந்த ஒற்றுமையைக் கூறி அவற்றுள் தமிழ் தன்னேர் இலாதது என்ற தன்மையை வேறுபடுத்திக் காட்டுவதால் பொருள் வேற்றுமை அணி ஆகும். 2

40.இலக்கிய நயம் பாராட்டுக.

*முன்னுரை:பாரதியார் குறிப்பு

* மையக் கருத்து: மழைப் பொழிவின் சிறப்பு 1

* திரண்டக் கருத்து: பாடலின் முழுவிளக்கம் எழுதுதல் 1

* மோனை: வெட்டி-வீரத் ; கொட்டி-கூவென்று ;எட்டு- ஏங்�னம்.

*எதுகை : வெட்டி,கொட்டி, சட்ட, எட்டு 1

* சந்தம் : சிந்துப்பா

* அணி: உயர்வு நவிற்சி அணி 1

* சுவை : பெருமிதச் சுவை .

41.பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.

1. சான்றோர்க்கு மதிப்பு கொடுத்தால் வாழ்வில் உயரலாம் 1

2 .காலையில் எழுந்து படித்தால் நமக்கு நன்மை ஏற்படும் 1

3. மாறனின் பேச்சுத் திறனை யாரால் வெல்ல முடியும். 1

4. குமாரனைவீட்டில் பார்த்தேன். 1

42.'மழைக்குப்பின் ' – தலைப்பில் சொந்த நடையில் மாணவர்கள் கவிதை எழுதிஇருந்தால் முழு மதிப்பெண் வழங்குக. 4

43.தமிழாக்கம் தருக. 4

பெரியார் சமூகச் சீர்திருத்தவாதி மட்டுமல்லர் அதற்கும் மேலானவர் . அவர் தாழ்த்தப்பட்டவர்களின் சிறந்த போராட்ட தலைவர். அவரின் செயல்பாடுகள் பரந்து விரிந்து இருந்தது. எந்தவொரு பிரச்சனைக்கும் ஆழமாகச் சிந்தித்துப், புரிந்து கொண்டு நிரந்தரத்தீர்வு காண்பவர். சமூகத்தில் ஆழமாகப் பதிந்திருந்த ஏற்றத்தாழ்வுகள் விலகுவதற்குப் பெரியாரின் வருகை முக்கியமான காரணமாக அமைந்தது.

44. காது கேளாத மாணவர்களுக்கான மாற்றுவினா.

அ)வெப்ப மண்டல பகுதியில் உள்ளது. 1

ஆ)தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே. 1

இ)நீரும் நீராடலும் தமிழர் வாழ்வியலோடு பிணைக்கப் பட்டவையாகும். 1

ஈ)குளித்தல் என்ற சொல்லுக்குக் குளிரவைத்தல் என்பது பொருள். 1

பகுதி–IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக 3×6= 18

44 (அ)தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவன :

*மாலை நேரச்சூரியன் மலை முகடுகளில் தலைசாய்த்து கிடக்க, வானம் செந்நிறப் பூக்காடாய் காட்சியளிக்கிறது.

*சிவந்த வானத்தின் நிறத்தை ஒத்தசிவந்த கைகளை உடைய உழைப்பாளர்களின் தோள்கள் மீது காணப்படும் வியர்வை முத்துக்களை வியந்து பாட தமிழின் துணை வேண்டும்.

* கவிஞர்களின் மனதில் பொங்குகின்ற கவிதைக்கு உணவாகும் ,தமிழே!

*பாண்டிய அரசவையில் கொலுவிருந்தாய்.

* பாரி முதலான வள்ளல்களையும் பெற்றுத் தந்தாய்.

* மீண்டும் அத்தகைய பெருமைமிகு பழமை நலம் புதுப்பிக்க தமிழ்க் குயிலாய் கூவி வா!

* கூண்டினை உடைத்தெறிந்த சிங்கம் போல சீறி வா!

* என்று சிற்பி பாலசுப்ரமணியம் தமிழின் சீரிளமைத் திறத்தை வியந்து பாடுகிறார்.

( அல்லது)

ஆ) சினத்தைகாத்தல்வாழ்வை மேம்படுத்தும்:

- ஒருவன் தன்னை விட மெலியவரிடத்தில் செல்லும்சினத்தைக்காக்கவேண்டும் ,
- தன்னைவிட வலியவரிடத்தில்செல்லும்சினத்தைக் காத்தால் என்ன? காக்கா விட்டால் என்ன?
- சினம் தீய விளைவுகளை ஏற்படுத்தும்,
- யாரிடமும் கோபம் கொள்ளாமல் அதனை மறந்துவிட வேண்டும்
- சினம் ஒருவரின் முகமலர்ச்சியையும், அகமகிழ்ச்சியையும் கொல்லும்.
- சினத்தைப் போன்ற பகை ஒருவருக்கு வேறு இல்லை.
- சினமானது நம்மில் இருந்து நம்மையே அழித்துவிடும்.
- சினத்தைவராமல் காத்துக் நம்மையும் காத்துக்கொள்ள வேண்டும்.
- சினம் தன்னைச் சேர்ந்தவரையும் சேர்த்து அழிக்கும் நெருப்பு.
- ஆதலால் சுற்றம் எனும் பாதுகாப்பு தெப்பத்தையும் சுட்டழித்துவிடும்.
- என்பதை உணர்ந்து சினத்தைக் கைவிட வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

(ஏற்புடைய கருத்துகள் ஆறு இருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்)

45. (அ) தாய்வழிக் குடும்பம்;

- சங்ககால குடும்ப அமைப்பு முறையில் தாயே முதன்மையானவராகக் கருதப்பட்டாள்
- ஆண் பெண் திருமணத்திற்குப் பின் பெண் வீட்டிலேயே கணவன் தங்கி வாழ்ந்தான்
- தாயே குடும்ப வாரிசாகக் கருதபட்டுச் சொத்துரிமைஅளிக்கப்பட்டிருந்தன (மருதத் திணைப் பாடல் குறுந்தொகை -295)

- பதிற்றுப்பத்து கூறும் சேரநாட்டு மருமக்கள் தாயமுறை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தந்தைவழிக் குடும்பம்

- ஆண் மையச் சமூகத்தில் பெண் திருமணத்திற்குப் பிறகு தன் கணவனுடைய வாழிடத்தில் வாழ வேண்டும்.
- கணவனேகுடும்பத்தலைவனாகவும்,வாரிசாகவும்கருதபட்டார்.
- கணவனுடைய இல்லத்தில் பெண்களுக்குச் சிலம்பு கழி நோன்பு செய்யப்படும்.
- ''மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே'' என்ற குறுந்தொகைப் பாடல் பெண் கணவனைச் சார்ந்திருத்தல் பற்றிகூறுகிறது.

தனிக் குடும்பம்

- தாய்,தந்தை, குழந்தை ஆகியமூவரும் உள்ள தனிக்குடும்பம் மிகவும் நெருக்கமானதாகும்
- தனிக்குடும்பம் சமூக படிநிலைவளர்ச்சியில் இறுதியாக ஏற்பட்ட ஒன்றாகும்.
- இன்றைய தொழிற்சமூகத்தில் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது.
- இத்தகைய தனிக்குடும்ப அமைப்பு முறை ஆதிகுடிகளிடமும் காணப்படுகிறது.

(அல்லது)

ஆ) மொழிசார் கலை

* எழுத்தையும் சொல்லையும் போன்று செய்யுளையும் ஒர்உள்ளமைப்பாகத் தொல்காப்பியம் கருதுகிறது.

* இலக்கியம் என்ற மொழிசார் கலை மொழியின் தனித்துவமான பண்புகளை இயன்ற மட்டும் தனக்குரியதாக்கிக் கொள்கிறது.

* இத்தகைய தன்மைதான் கவிதைத் தளம் அல்லது இலக்கியத்தளம்ஆகும்.

* மொழி சார்ந்த பொருள்மொழி சார்ந்த கலையாக ஆகிவிடுகிறது.

ஒலிக்கோலங்கள்:

- சமிக்ஞையிலும்-இசையிலும்- மொழி தொடங்குகிறது.
- மொழிச்சார்ந்த கவிதை இசையோடும் இசைக்கருவியோடும் பிறக்கிறது.
- ''கடந்தடு தானை மூவிருங்கூடி ''-வல்லின மெய் மிகுந்து வன்மையான உணர்ச்சியைக் காட்டும்.
- ''படா அஈத்த கெடாஅ நல்லிசை''. குறில்நெடிலாக நீண்டும்
- புணரின் புணராது –ஒலிகளும் சொற்களும் திரும்பவரல் தன்மையும்
- ''நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை''என்ற சொல் விளையாட்டும் ஒலிக்கோலங்களைத் தோற்றுவிக்கின்றன.

சொற்புலம்:

- சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன.
- கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.

- ஒரு பொருள் குறித்து வரும் பல சொல்லும், பல பொருள் குறித்த ஒரு சொல் மிகுந்து வருதல்,
- பல சூழல் - பல புனைவு உரியதாய் வருதலும்,
- உணர்வு தெளிவு கொண்டதாய் வருதலும்,
- ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் கவவுக்கை நெகிழாமல் மயங்கிக் கிடக்கும்- தொகைநிலை-தொகைமொழிகள் அமைதல்,

*46.(அ). பாரதியின் மொழிப்பற்று;*

- தாய்த்தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க.
- புதியச்செய்தி,புதியச்சிந்தனை,இன்பம்,உண்மை தமிழில் தோன்றுக.
- தமிழ்நாட்டில் வீதி தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக.
- அப்பள்ளிக்கூடங்களில் தாய்மொழி வழிக்கல்வியோடு நவீனக்கலைகள் வளர்க்க,

சமூகப்பற்று

- ஆணும் - பெண்ணும் உயிரெனக்கருதி வாழவேண்டும்.
- தமிழ்நாடு எல்லாவளங்களும் பெற்றுத் திகழவேண்டும்.
- தமிழ்நாட்டில் நோய்கள் தீர வேண்டும்.
- தமிழகத்தில் தொழிற்சாலைகளும், வேளாண்மையும் பெருகவேண்டும்.
- அனைவரும் முயற்சியிலும், உழைப்பாலும் சிறந்து விளங்கவேண்டும்.
- இசை, சிற்பம், வானநூல்,எந்திர நூல், என தமிழில் பல்கிப் பெருக வேண்டும்.

(அல்லது)

ஆ) உரிமைத் தாகம்

முன்னுரை - குடும்ப நிலை - அண்ணன் தம்பி பிரிவினை - ஒதுங்கி வாழும் அண்ணன் - தம்பியின் பரிதாப நிலையைக் கேட்டறிதல்- தம்பிக்குசொந்தமான நிலம் பறிமுதல் - வெள்ளைச்சாமியின் பரிதாப முடிவு -முடிவுரை

(ஏற்புடைய தலைப்புகளில் சொந்த நடையில் எழுதி இருப்பினும் முழு மதிப்பெண் வழங்கலாம்.)

## பகுதி V

அ) அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக $4+2 = 6$

47. அ) ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி

ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் – ஆங்கவற்றுள்

மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது.

தன்னேர் இலாத தமிழ்! - தண்டி 4

ஆ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்

ஏமப் புணையைச் சுடும். 2